தலைப்பு 244 – வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களம்.

---

1. நிதிக்கூற்றுக்கள்.

1.1. முனைப்பழிஅற்ற அபிப்பிராயம்.

வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பெழிப்பு அறிக்கை கணகீட்டு உத்தியோகத்தரிற்கு 2019 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. முனைப்பளியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பு.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4. நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு.

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமையால் பயன்படத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, நடைமுறைப்படுத்தப்படும் கணகீட்டு மதிபீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயமான தன்மை என்பவற்றை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

1.5. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள தெரிவித்துக்கொள்கின்றேன்.

வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு.

2.1. செலவின முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்று முலதன செலவு விடயங்களின் சேமிப்பு 9 – 12 சதவீத வீச்சுகளிற்குள் காணப்படுகின்ற அதேவேளை ஒரு செலவு விடயத்தின் சேமிப்பு 100 வீதமாகும். | மதிப்பீடுகள் யதார்த்தமான முறையில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்பட்டது. |
| (ஆ) | ஐந்து மீண்டுவரும் செலவு விடயங்களின் சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் 21 சதவீதம் முதல் 73 சதவீத வீச்சிற்குள்ளாகும். | - Do - | பாதீடு தயாரிப்பு தொடர்பான கடப்பாடுகளிற்கமைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அவ் நடவடிக்கைகள் எதிர்பார்த்த அளவிற்கு இடம்பெறவில்லை. அலுவலர்களிற்கு எதிர்பார்த்த அளவிற்கு வெளிநாட்டு பயிற்சிகளிற்கான வாய்ப்புகள் சென்ற ஆண்டைப் போன்று வழங்கப்படவில்லை. |

2.2. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒதுக்கீட்டு கணக்கு, பொறுப்பகள் தொடர்பான கூற்று மற்றும் செலவுறுதிச் சிட்டை என்பவற்றிற்கு அமைவாக முறையே ரூபா. 379,431, ரூபா. 87,850, ரூபா. 481,951 ஆக உள்ள பெறுமதிகள் நான்கு செலவு விடயங்கள் தொடர்பில் மொத்த பொறுப்புகளில் காட்டப்பட்டுள்ளது. | சரியாக இனங்காணவும் கணக்குகளில் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | பொறுப்புகள் பதிவேடு நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளது. |

2.3. கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள்

தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினுடைய நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கட்டுநிதி முகாமைத்துவம், செலவு முகாமைத்துவம், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளில் உள்ள குறைபாடுகள், மற்றும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை தொடர்பான பதில்கள் முறையே 2.1, 2.2, 2.3 மற்றும் 2.5 ன் கீழ் வழங்கப்பட்டுள்து. இது அவதானிப்புகளுடன் உடன்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு.

### 3.1. திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னிலைப்படுத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரம் விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் மதிப்பாய்வு ஆண்டிற்கான நாளதுவரைப்படுத்தப்பட்ட நிறுவன அமைப்பு, | தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டும். | அவதானிப்புகளுடன் உடன்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் |

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட் ஆளணி மற்றும் தற்போதைய ஊழியர்கள் மற்றும் வருடாந்த நடவடிக்கைகளிற்கான கட்டுநிதி திட்டம் என்பவை தொடர்பான விடயங்கள். | | திட்டத்தில் உள்டக்குமாறு வேண்டப்பட்ட தகவல்களை முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3.2. கடமைகள் நிறைவேற்றப்படாமை.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளை பொறுத்தவரை, சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19(அ) மற்றும் அரசாங்க கொள்கைளின் பிரகாரம் வரி பதிவழிப்பு மற்றும் விட்டுவிடல், வரி தள்ளுபடி நடவடிக்கைககளில் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களமானது ஈடுபட்டிருந்தது. எனினும் வர்த்தமானியில வழங்கப்பட்ட வரி தள்ளுபடிகள் தொடர்பான தகல்களைள் பிரசுரித்து அதன் மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் 2016 திசம்பர் 31 முதல் கணக்காய்வு திகதியான 2019 மே 10 வரை மேற்கொள்ளவில்லை. | உரிய ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க கொள்கைளின் பிரகாரம் வரி பதிவழிப்பு மற்றும் விட்டுவிடல், வரி தள்ளுபடிகள் தொடர்பான தகவல்களை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுங்க கட்டளைச் சட்டத்தின் 19 (அ) பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது வரி பதிவழிப்பு தொடர்பாக சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட தகவல்களில் உள்ள குறைபாடுகள், மீண்டும் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் திருத்தம் செய்யப்படவேண்டுமென சுங்கத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. திருத்தங்கள் பூர்த்தியடைந்ததும் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
|---|---|---|
| திணைக்களம் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை 2015 – 2030 காலப்பகுதியில் அடைய வேண்டிய வகையில் தமது கவனத்தை செலுத்தியிருக்க வேண்டும். | அடைந்து கொள்ளவேண்டிய இலக்குகளில் கவனம் செலுத்துவதன் முலம் அந் நோக்கங்களை அடைந்துகொள்ள உடனடியாக நடவடிக்கை | 2017 ஆம் ஆண்டின் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையுடன் தொடர்புபட்ட அவதானிப்புகளில் |

| | | |
|---|---|---|
| இருப்பினும் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் உள்ளடங்கலான திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. | எடுக்கப்படவேண்டும். | குறிப்பிட்டுள்ளவாறு, இத் திணைக்களமானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் நேரடியாக ஈடுபடவில்லை ஆனால், அவ் இலக்ககளை அடைந்துகொள்ள ஏனைய நிறுவனங்களிற்கு வசதியளிப்பதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள திணைக்களமானது மறைமுகமாக பங்களிப்பு செய்வதாக தெருவிக்கப்படுகின்றது. ஆகையினால், திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள், பல்வேறுபட்ட பொது நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள உதவுகின்றது. |

5. மனித வள முகாமைத்துவம்.

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்ப கண்டறியப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 19 சதவீதமாக உள்ள 12 பதவிகள் வெற்றிடமாக உள்ளது. சிரேஸ்ட மட்டத்தில் உள்ள 04 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. | திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்பவதற்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கைகள் சீராக மேற்கொள்ளப்பட வேணடும். | 2018.12.31ல் காணப்பட்ட வெற்றிடங்களில், சிரேஸ்ட மட்டத்தில் 03 வெற்றிடங்கள் உட்பட 07 வெற்றிடங்கள் மட்டுமே தற்போது காணப்படுகின்றது. வரி ஆய்வாளர் இருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பொது சேவை ஆணைக்கழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. |